
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1018

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

37

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## திராவிட இயக்க மானுடப் பார்வையில் கிறுத்துவம்!

இஸ்லாமியர்களும் திராவிடர்களே என்று பெரியாரும் அண்ணாவும் உறுதியோடு எடுத்துக்கூறிய வேளையில், திராவிட இனம்தான் இந்தியாவில் முன்னோடி இனம், திராவிட இனத்தின் வாழ்வியலில் ஜாதி-மதப் பாகுபாடுகளுக்கு இடமில்லை என்ற தொல்லியல் ஆதார அடையாளங்களை இந்த இனத்திற்கு தந்தவர்கள் கிறிஸ்தவ மிஷினரிகள். குறிப்பாக இராபர்ட் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் வழங்கப்பட்ட மிகப்பெரிய வரலாற்றுக் கொடை என்றே கூற வேண்டும்.

"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு மற்றும் மால்டோ ஆகிய மொழிகள் அனைத்தும் ஒரே மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை. அவற்றைப் பொருத்தமாகத் தென்னிந்தியப் பகுதி மொழிகள் என அழைக்கலாம். தமிழுக்கு வடமொழி கலப்பே தேவைப்படாது, தனித்தியங்கும் தன்மை கொண்டது" என்ற கால்டுவெல்லின் ஆய்வு முடிவுகள் இன்றுவரை ஆரியத்தின் கண்களை உறுத்திக்கொண்டு இருக்கின்றன. தமிழுக்காகவே வாழ்ந்து தொண்டு செய்து மறைந்தவர் வீரமாமுனிவர்.

'தொன்னூல் விளக்கம்', 'செந்தமிழ் இலக்கணம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்', 'இலக்கணத் திறவுகோல்' ஆகிய இலக்கண நூல்களையும், 'திருக்காவலூர் கலம்பகம், 'கித்தேரியம்மாள் அம்மானை', 'அடைக்கல மாலை', 'அடைக்கல நாயகி மேல் வெண் கலிப்பா' முதலிய சிற்றிலக்கியச் செய்யுள்களையும், 'வேதவிளக்கம்', 'வேதியர் ஒழுக்கம்', 'பேதகம் மறுத்தல்' போன்ற உரைநடை நூல்களையும் தமிழில் படைத்தவர் வீரமாமுனிவர்.

இவ்வாறு தமிழுக்காகவும், திராவிட இனத்தின் வரலாற்று மீட்புக்கும் பணியாற்றிய மிஷனரிகள் ஏராளம் இருக்கிறார்கள்.

இன்னொருபக்கம் "எதைக்கொடுத்தாலும் சூத்திரனுக்கும் பஞ்சமனுக்கும் கல்வியைக் கொடுக்காதே" என்ற வருணாசிரமக் கட்டுப்பாட்டையும் கிருத்துவம் மிஷனரிகள் தகர்த்தனர். ஊரெங்கும் கல்விச்சாலைகள் அமைத்தனர். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை கல்வி கற்கச் செய்தனர். கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு மேலாக கிறுத்தவ நிறுவனங்கள் இந்தியாவில் கல்விச் சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. கத்தோலிக்க கிறுத்துவ சபை மட்டுமே இந்தியாவில் 14,000 பள்ளிகள், 650 கல்லூரிகள், 450 தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள், 7 பல்கலைக் கழகங்கள், 5 மருத்துவக் கல்லூரிகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. அனைத்து கிறுத்துவ நிறுவனங்களாலும் நடத்தப்படுகிற கல்வி நிறுவனங்களில் எண்ணிக்கை சுமார் 50,000.

கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்களின் இந்த கல்வி தொண்டு பணிகளை ஆரியவாதிகள் பலர் அன்றும் எதிர்த்தார்கள் இன்றும் எதிர்க்கிறார்கள். கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் வெளிநாடுகளில் இருந்து நன்கொடை பெறுவதை ஒன்றிய அரசு முடக்குகிறது. வடமாநிலங்களில் பல ஊர்களில், கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்கள் பள்ளிகள் இயக்குவதையே முடக்க முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலோ கிறிஸ்தவ மிஷனரிகள் கல்விச்சேவைக்கு ஆற்றும் பங்களிப்பை திராவிட முன்னேற்றக் கழகம் மறந்ததே இல்லை.

சென்னை சேத்துப்பட்டில் உள்ள எம்.சி.சி. பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 08.12.2024 அன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய, கழக இளைஞர் அணிச் செயலாளர் - மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "பள்ளியில் படித்தாலே தீட்டு என்று இருந்த நிலையில் படிக்காமல் விட்டால்தான் தீட்டு என்று கல்வியை கொடுக்க கிறிஸ்துவ அமைப்புகள் பள்ளிகளை திறந்து உதவின. அது என்றைக்கும் போற்றுதலுக்கு உரியது." என்று கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை பறைசாற்றினார்.

இந்த பார்வை இப்போது உருவானதல்ல. பெரியார், அண்ணா காலத்திலேயே திராவிட இயக்கத்திற்கு இந்த புரிதல் இருந்தது. 04-09-1932-இல் 'இந்து மதம் சாதித்தது என்ன?' என்ற தலைப்பில் தலையங்கம் குடிஅரசில் வெளியாகியிருக்கிறது. உலகில் உள்ள மதங்களுடன் இந்து மதத்தை ஒப்பிட்டு அந்த தலையங்கத்தை பெரியார் எழுதியிருப்பார். அதில், 'இந்தியாவில் சிறப்பாகப் பரவி இருக்கும் கிறிஸ்தவ மதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதுவும் மக்களுடைய வறுமையைப் போக்குவதிலும், மக்களுக்குக் கல்விப் பதிவையூட்டுவதிலும், மருத்துவ உதவியளிப்பதிலும் சிறந்து நிற்கின்றது என்பதில்ஐயமில்லை. அந்த மதத்தைப் பின்பற்றும் மக்களும் நாளுக்கு நாள் ஒற்றுமையடைந்து கல்வியறிவிற் சிறந்து, மக்கள் கூட்டத்தில் பெருகி முன்னேறி வருகின்றனர்.

கிறிஸ்தவ மதமும், மனித சகோதரத்துவத்தைப் போதிக்கின்றது. தற்பொழுது இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் இந்துக்களின் சார்பு காரணமாக வகுப்பு வேற்றுமை பாராட்டக் கூடியவர்களாயிருந்தாலும் வகுப்பு வேற்றுமைக்கு அவர்கள் மதத்தில் ஆதாரமேயில்லை. கிறிஸ்தவ மதத்தில் ஆண்களைப் போலப் பெண்களுக்கும் எல்லா உரிமையும் உண்டு. சொத்துரிமையுண்டு. விதவா விவாகம் உண்டு. ஒருவன் ஒருத்தியைத் தான் மணம் புரிந்து கொள்ளலாம். மற்ற நாடுகளில் விவாக விடுதலையுண்டு. இந்தியாவில் மட்டிலும் இல்லை. ஆகவே, இம்மதம் அதைப் பின்பற்றும் மக்களுக்கு நன்மை செய்து வருவதை அறியலாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

1951-ஆம் ஆண்டு சென்னை, தியாகராயர் கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றிய அண்ணா, "கிறித்தவர்கள் கையில் வைரம் கிடைத்தால் அது 'இலயோலா கல்லூரியாக' இருக்கும்; மருத்துவமனையாக ஒளிரும். நல்வாழ்வுக் கூடங்களாக மலரும். விலை மதிப்புள்ள பொன்னும் மணிகளும் இந்துக்களிடம் மூடச் செயலால் முடக்கப்படுகின்றன. மக்களுக்குப் பயன்படாத வகையில் ஆண்டவனின் நகைகளாக, ஆடம்பர ஊர்திகளாக மாறுகின்றன. ஆனால் கிறித்தவர்களிடையே அதே மணிகளும் வைரங்களும் கிடைத்தால் அறிவை வளர்க்கும் கல்லூரிகளாக, நலம் தரும் மருத்துவமனைகளாக மாற்றம் பெற்றுச் சமுதாய உயர்விற்கு வழிவகுக்கின்றன" என்றார்.



"கிறுத்துவர்கள் கையில் வைரம் கிடைத்தால் அது 'இலயோலா கல்லூரியாக' இருக்கும்; மருத்துவமனையாக ஒளிரும். நல்வாழ்வுக் கூடங்களாக மலரும்".

இவ்வாறு காலம் காலமாக கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்களின் கல்விச்சேவையை பாராட்டியே வந்திருக்கிறது திராவிட இயக்கம். காரணம் திராவிட இயக்கத்திற்கு மதம் எதிரியல்ல, எவையெல்லாம் மானுடத்திற்கு எதிரானவையோ அவைதான் முதன்மை எதிரி. மானுடத்தின் வளர்ச்சிக்கு அவசியமான கல்வியை எந்த மத நிறுவனம் வழங்க முன் வந்தாலும், அதை அங்கீகரிக்கிற, ஆதரித்துப் போற்றுகிற மனம் திராவிட இயக்கத்திற்கு அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது.

திராவிட இயக்கத்தின் இப்புரிதல் தமிழ்நாட்டின் பொதுப்புத்தியாகவும் வளர்ந்திருக்கிறது. அதனால்தான் தமிழ்நாட்டில் எப்படி காந்தி மறைவின்போதும் சரி, தற்போது திருப்பரங்குன்றம் விவகாரத்திலும் சரி இஸ்லாமியர்களுக்கு எதிரான கலவரத்தை கட்டமைக்க முடியவில்லையோ, அதுபோல கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் ஆரியவாதிகளால் கலவரத்தை கட்டமைக்க இயலவில்லை.

குறிப்பாக 2008-ல் ஒடிசாவின் கந்தமால் மாவட்டத்தில் சாமியார் லக்ஷ்மணானந்த சரஸ்வதி படுகொலையை தொடர்ந்து, நாடு முழுவதும் வலதுசாரிகளால் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஒடிசாவில் மட்டும் 39 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். அருகே உள்ள கர்நாடகாவில் கூட சில தேவாலயங்களில் கல்வீச்சு சம்பவங்கள் நடைபெற்றன. தமிழ்நாட்டில் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றால், சம்மந்தப்பட்டவர்கள் மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எச்சரித்தார் அன்றைய முதல்வர் கலைஞர்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மத நல்லிணக்கத்திற்கும் கிறிஸ்தவ நிறுவனங்கள் எவ்வளவு பாடுபட்டனவோ, அந்த அளவுக்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் வளர்ச்சிக்கும் துணை நின்றிருக்கிறது திராவிட இயக்கம்.

...நீளும்

## வாக்கைப் பறிப்பது ஜனநாயக விரோதம்!

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் யாருக்காக? எதற்காக? என பொதுமக்கள் எழுப்பும் கேள்விகளை, முகநூலில் கவனப்படுத்தி இருக்கிறார் பத்திரிகையாளர் கோவி.லெனின்.அவரது பதிவிலிருந்து...

"SIR.. எதுக்குங்க S.I.R? எங்களுக்கு எதற்கு இந்த ஃபார்ம் கொடுக்குறீங்க? எங்க பெயர்தான் ஏற்கனவே வோட்டர் லிஸ்ட்ல இருக்கே?"

"உங்க ஓட்டு மட்டுமில்லீங்க. நம்ம யாருக்குமே இப்ப அதிகாரப் பூர்வமா ஓட்டு இல்லை. எல்லாருடைய ஓட்டையும் புதுப்பிச்சாதான் 2026 தேர்தலில் ஓட்டுப் போட முடியும். அதுக்குத்தான் இந்த ஃபார்ம்."

"இதிலே இவ்வளவு விவரம் கேட்டிருக்காங்களே? இதுக்கு முன்னாடி நடந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் பெயர் இருந்ததான்னும் கேட்டிருக்காங்களே?"

"ஆமாங்க... 2002 அல்லது 2005 - ஆம் வருசத்து வாக்காளர் பட்டியலில் உங்க பேரு இருக்கான்னு பார்த்து பூர்த்தி பண்ணணும்."

"20 வருசத்துக்கு முன்னாடி என் பேரு, எங்கே இருந்ததுன்னு போய் தேடுறது?"

"தேர்தல் கமிஷன் வெப்சைட்டுல இருக்கு. லிங்க் அனுப்பட்டுங்களா?"

"தேர்தல் கமிஷன் பார்க்க வேண்டிய வேலையை, வாக்காளர் தலையில கட்டுறீங்களே, நியாயமா?"

"அநியாயம்தான்... இந்த அநியாயத்தைத்தான் பா.ஜ.க.வுக்காக தேர்தல் ஆணையம் செய்யுது. இந்த அநியாயத்தை செஞ்சே ஆகணும்னு கோர்ட்டுல, அ.தி.மு.க. கேஸ் போட்டிருக்கு"

"அட்டூழியமா இருக்கே.. எங்க பக்கத்து வீட்டுக்காரங்க போன தேர்தலில்தான் இந்தத் தொகுதி வாக்காளர் பட்டியலில் பேரை சேர்த்து ஓட்டு போட்டாங்க. அவங்க பழைய வாக்காளர் பட்டியல் சொந்த ஊருலதானே இருக்கும்."

"அதையும் வெப்சைட்டில் தேடி கண்டுபிடிச்சி சேர்க்கணுமாம். பிள்ளைங்க பேரு பழைய வாக்காளர் பட்டியலில் இல்லைன்னா அவங்க அப்பா, அம்மா பேரைக் கண்டுபிடிச்சி தொகுதி-பாகம்-வரிசை எண் எல்லாத்தையும் சரியா எழுதணும். இல்லைன்னா வாக்காளர் பட்டியலில் பேரு இருக்காது."

"இதையெல்லாம் நாங்க எழுதணும்னா தேர்தல் கமிஷன் எதுக்கு இருக்கு? 18 வயசு ஆயிடிச்சிங்கிறதுக்கு ஆதாரத்தையும் அட்ரஸையும் கொடுத்தா பேரை சேர்க்க வேண்டியதுதானே தேர்தல் கமிஷன் கடமை."

"இருக்கிற ஓட்டை பறிக்கிறது ஜனநாயக விரோதம்" என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



சித்ரா லட்சுமணன்



### இன்முகத்துடன் வரவேற்பார்!

2000-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தேர்தலில் அ.செ.இப்ராஹிம் ராவுத்தர் அவர்கள் தலைவராகவும் நான் செயலாளராகவும் வெற்றி பெற்றதையடுத்து, திரையுலக நிர்வாகிகளுடன் ஒரு குழுவாகப் புறப்பட்டுச் சென்று, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற சென்றோம். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. அதன்பின்னர், முதல்வருடன் நிறைய சந்திப்புகள் நிகழ்ந்தன. எப்போது சென்றாலும், இன்முகத்துடன் வரவேற்று, திரைப்படத்துறை பிரச்சினைகளைக் கனிவுடன் தீர்த்து வைப்பார்.

– நடிகர் சித்ரா லட்சுமணன்,
திரைப்பட இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர்,
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம்வரலாறு

### கழக ஏடுகளில் துக்கம்!

1958-ஆம் ஆண்டு, ஜூன் 26 ஆம் தேதி, சென்னையில் புகழ்பெற்ற மருத்துவரான எம்.ஆர்.குருசாமி இயற்கை எய்திய செய்தியை நம்நாடு நாளேடு முதல் பக்கத்திலும், 4 ஆம் பக்கத்திலும் பெரிய அளவில் செய்தி வெளியிட்டது. திராவிட நாடு இதழும் செய்தி வெளியிட்டது. இவர் ஏழை மக்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்த்தவர். குறிப்பாக பார்ப்பனரல்லாதவரால் மிகப்பெரிய திறமையுள்ள மருத்துவராக திகழ்ந்தார். இவர் இறப்பை ' இயக்கத்தவர்' இறந்ததுபோல கழக ஏடுகள் துக்கம் சுமந்தன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131